உ

# அருள் ஒளி



## நவராத்திரி சிறப்புமலர்

வெளியீடு

**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**

தெல்லிப்பழை, இலங்கை


2018

136

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனன நூற்றாண்டு


## ஏழாலை ஆத்மஜோதி நா. முத்தையா



சைவமும் தமிழும் வாழ வாழ்நாள் முழுவதும் அர்ப்பணித்த பெருந்தகை

## திருகோணமலை அமரர் பொ. கந்தையா

( காந்தி ஐயா )



சைவமும் தமிழும் காத்த அறநெறியாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

# அருள் ஒளி

( மாதாந்த சஞ்சிகை )

ஆசிரியர்
கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள்
உதவி ஆசிரியர்
திரு. சு. ஏழூர்நாயகம் அவர்கள்

புரட்டாதி மாத மலர்
2018

வெளியீடு : ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை, இலங்கை.
e-mail : thurkaiammantemple@gmail.com
face book : tellidurga@gmail.com

பதிவு இல.: ISSN 2362 - 0587
ISBN 978 - 955 - 23 - 0019-3


## நூற்றாண்டு விழாவுக்குரிய ஆசிரியர்களிடம் நாம் கற்கவேண்டியவை

இவ்வருடம் ஈழத்துச் சைவ சமூகத்தவர்கள் மதித்துப் போற்றும், இரு பெரியவர்களின் ஜனன நூற்றாண்டு என்பது குறிப்பிடத்தக்கது. ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களதும், திருக்கோணமலை காந்தி ஐயாவினது நூற்றாண்டு விழா அன்பர்கள் கொண்டாடுவது போற்றுதலுக்குரியது. ஆத்மஜோதி ஐயா அவர்களும், காந்தி ஐயா அவர்களும் தமிழாசிரியர்கள். திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் சிறந்த பயிற்சி பெற்ற இவர்கள் சமூகத்துக்கு ஆற்றிய பணிகள் மறக்கமுடியாதவை. ஆசிரியத்துவத்தை உணர்ந்து செயற்பட்ட புண்ணிய ஆத்மாக்கள். இருவரது வாழ்வும் சைவசமய வளர்ச்சிக்கும், தமிழ்மொழி வளர்ச்சிக்கும் பெரிதும் துணைசெய்தமையை சகலரும் அறிவர்.

ஆத்மஜோதி ஐயா அவர்கள் ஏழாலையில் பிறந்து மலையகத்தில் நீண்டகாலம் ஆசிரியப்பணியாற்றியவர். காந்தி ஐயா அவர்கள் மாதகலில் பிறந்து திருக்கோணமலையில் நீண்டகாலம் ஆசிரியப்பணியாற்றியவர். இருவரும் கல்விப்பணியோடு மட்டும் நின்றுவிடாது நிறைந்த கருணைப் பணிகள் ஆற்றியவர்கள். ஏழை பங்காளர்களாக வாழ்ந்தவர்கள். ஆதரவற்றவர்களுக்கு அபயகரங்களாக விளங்கியவர்கள். சமூகப்பணிகளுக்காக தமது உடல், பொருள் ஆவியை அர்ப்பணித்த பெருந்தகைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்மஜோதி ஐயா பிரமச்சாரியாக வாழ்ந்து இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரத்தில் நாவலப்பிட்டியில் அனைத்தும் இழந்து வெறுங்கையோடு யாழ்ப்பாணம் வந்தவர். அவரது ஆத்மஜோதி அச்சகம், வீடு தீயில் எரிந்த நிலையில் துயரத்துடன் வாழ்ந்தவர். இந்து சமயப் பேரவை என்ற அமைப்பை உருவாக்கியவர். கைதடியில் சைவச் சிறுவர் இல்லத்தை நிறுவி அப்பிள்ளைகளுக்காக நிதிவளம் பெருக்கியவர். பாதயாத்திரைகளை நடாத்தி சமய விழிப்புணர்வை ஏற்படுத்திய புண்ணிய சீலர். பல நூறு சமயக் கட்டுரைகள் எழுதியவர். பல நாடுகளுக்குச் சென்று சமயப் பணியாற்றியவர். குளிரையும் பொருட்படுத்தாது கனடா நாட்டுக்குச் சென்று இந்து சமயப் பேரவைக்கு நிதி திரட்டும் வேளை திடீரெனக் கனடா வில் காலமானவர். அசாதாரண சூழ்நிலையால் அவரது பூதவுடல் கனடாவிலேயே அடக்கம் செய்யப்பட்டது. அல்லும் பகலும் அயராது எம்மவர்க்காக உழைத்த இப்பெருந்தகையை கனடா வாழ் சைவ மக்கள் மறக்கவில்லை. அன்னாரின் நினைவாக கனடா இந்து சமயப் பேரவை நூற்றாண்டு சிறப்பு மலர் வெளியிட்டு அன்னாரை கௌரவித்தமை பாராட்டுக்குரியது. இங்கு பலர் அவரை மறந்துவிட்டார்கள் போலும்.

மாதகல் மக்கள் காந்தி கந்தையா உபாத்தியாயரின் நூற்றாண்டு விழாவை விமரிசையாகக் கொண்டாடுவது அறிந்து மிகவும் ஆனந்தம். திருமலையில் பல ஏழைகளின் மரணவீட்டை தானே பணம் சேர்த்து நிறைவேற்றியவர். வீதிகளில் நூல் பரப்பி எல்லோரையும் வாசிக்கத் தூண்டியவர். தொண்டுப் பணிகளால் திருக்கோணமலையில் மக்கள் மனதில் இன்றும் வாழ்பவர்.

காந்தி ஐயாவின் நூற்றாண்டு விழாவை அவர் பிறந்த மாதகலில் பாரதி சனசமூக நிலையம் பெரியளவில் கொண்டாடுவது பெருமைக்குரிய விடயமாகும்.

இன்றைய ஆசிரிய சமூகம் தமது பாடசாலைக் கடமையைக் கூட சீராக நிறைவேற்றாது தமது சொந்த நலன்களில் அக்கறை கொள்ளும் இக்காலத்தில் நூற்றாண்டு விழா நாயகர்களை அறிந்து சமூகத்துக்கு தம் பணியைச் செய்ய முன்வரவேண்டுமென வேண்டி நிற்போமாக.

– **ஆசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மீகச் சிந்தனைகள்

1. சொல்வதனால் குறைந்து போகும் பொருள்கள் இரண்டு அவை:- புண்ணியமும், பாவமுமாகும் ஆகும். நீ செய்த புண்ணியங்களை "தருமங்களை" நீயே எடுத்துச் சொல்வதனால் புண்ணியம் குறையும். நீ செய்த பாவங்களை நீயே பிறரிடம் கூறுவதனால் பாவம் குறையும். குறைய வேண்டியது பாவம் நிறைய வேண்டியது புண்ணியம். ஆதலினால் நீ செய்த புண்ணியத்தைக் கூறாதே பாவத்தைக் கூறு.

2. நீ இறைவனுடைய கருனையைப் பெற வேண்டுமானால் அதற்கு வழி ஒன்று உண்டு. அது வெறும் வணக்கமும் வழிபாடும் மட்டுமன்று. துன்பமுற்றுத் துடிக்கிற உயிர்களிடம் நீ கருனை செய். அவற்றின் துன்பத்தை நீக்கு. நீ பிற உயிர்களிடம் கருனை செய்தால் கடவுள் உன்னிடம் கருனை செய்வார். கருணையால் கருணையைப் பெறலாம். இதனை ஒருபொழுதும் மறவாதே.

3. உலகத்திலே நீ இரு. ஆனால் உலகம் உன்னிடத்தில் இருக்கக்கூடாது. குடும்பத்தில் நீ இரு. ஆனால், குடும்பம் உன்னிடத்தில் இருக்கக்கூடாது. உலகமும் குடும்பமும் உள்ளத்தில் புகுந்தால் நீ அழுந்திவிடுவாய். வண்டிமேல் நீ ஏறு வண்டி உன்மேல் ஏறக்கூடாது. கப்பல் கடலில் இருக்க வேண்டும், கடல் கப்பலில் புகக்கூடாது. கடல் நீர் கப்பலில் புகுந்தால் கப்பல் அழிந்திவிடும்.

4. வேறு எந்தப் பிராணிகளுக்கும் இல்லாத நரையை உனக்கு இறைவன் தந்தது எதன் பொருட்டு என்று சற்றுச் சிந்தித்துப் பார் ஏனைய பிராணிகள் உண்பதற்கும் உறங்குவதற்கும் மட்டுமே ஏற்பட்டவை. மனிதனாகிய உன்னில் உறையும் உத்தமனை அடைய நீ வந்தாய். அதை மறந்தவருக்கு ஓர் உணர்ச்சி வரும்பொருட்டே இறைவன் நரையைத் தந்தான். நரைக்கத் தொடங்கும்போதாவது உன் ஆவி ஈடேறும் நெறியில் செல்.

5. யாசித்து, நெய்யும் பாலும் தயிரும் சேர்ந்த சிறந்த அன்னத்தை உண்பதைவிட, உழைத்து உண்ணும் தண்ணீரும் சோறும் சிறந்தது. வீரமும் புகழுமில்லாமல் மங்கி நெடுங்காலம் இருப்பதைவிட, வீரமும் புகழும் பெற்றுச் சிறிது காலம் வாழ்வது சிறந்தது. உமிக்குவியல் நெடுநேரம் காந்திக் கருகுவதைவிட, தைலமுள்ள மரம் ஜொலித்துச் சிறிது நேரம் எரிவது சிறந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. புலன்களை வென்றவனே வீரன். இறைவனுடைய இலக்கணங்கள உணர்ந்தவனே ஞானி. துன்பங்களைப் பொறுப்பவனே தவ. விருந்தினருக்கென்று வாழ்பவனே இல்லறத்தான். அறஞ் செய்ய வாய்ப்பு இல்லாதபோது இறந்தவனே இருந்தவன். கொடு பொருளைத் திரட்டி வாழ்பவனே இறந்தவன்.

7. அழுக்கு மூன்று வகையாகும்..

i) மன அழுக்கு. அவை:- பொறாமை, ஆசை, கோபம், பகை என்பன. இந்த மன அழுக்கைத் "தியானம்" என்ற நீரால் கழுவுக.

ii). வாயழுக்கு, அவை:- பொய், புறங்கூறல், தீச்சொல் என்பன. இந்த வாயழுக்கைத் "துதி" என்னும் நீரால் கழுவுக.

iii). மெய்யழுக்கு. அவை:- கொலை, புலை, பிறன்மனை நயத்தல், களவு முதலியன. இந்த மெய்யழுக்கை "அர்ச்சனை" என்னும் நீரால் கழுவுக.

8. நாவுக்கு அடிமையாகாதே! "நல்லுணவு எங்கே? எங்கே? என்று தேடி ஏங்காதே. இறைவனருளால் கிடைத்ததை உண்டு திருப்தியடை. நாவுக்கு அடிமையானால் உனது நலம் குறையும். மீன் சதா உணவாசையினால் ஒழியாமல் தண்ணீரில், உலாவுகிறது, ஒருசமயம் உணவாசையால் தூண்டிலில் பட்டு இறந்துவிடுகிறது.

9. பாம்பு, தேள், நட்டுவாக்கிலி முதலிய பெருந் துன்பத்தைச் செய்யும் உயிர்களைப் போலவும். பெருச்சாளி, எலி, பூனை, நாய் முதலிய துன்பத்தைச் செய்யும் உயிர்களைப் போலவும், கொசு, மூட்டை பூச்சி, உண்ணி முதலிய சிறு துன்பத்தைச் செய்யும் உயிர்களைப் போலும் நீ இருக்காதே. அணில் என்ற உயிரை நோக்கு. அது ஒருவருக்கும் தீங்கு செய்யாமல் வாழ்கிறது. சேதுபந்தனத்தில் ஸ்ரீராமருக்கு உதவி செய்தது. அதுபோல் வாழ்தல் வேண்டும்.

10. பிறர் உன்னை வைவார்களாயின் அந்த வன்சொற்களை இன் சொற்களாக கருது. நீ எக்காரணத்தைக் கொண்டும் எப்போதும் எவ்விடத்தும் பிறரை வன்சொல் கூறி வையாதே. கிடைத்தது கூழாயினும் அதனை நெய்யன்னமாகக் கருதி உணவு செய். பழம் பாயேயானாலும் பஞ்சணையாகக் கருதிப் படு. கசப்புப் பெருளாயினும் அதனைக் கற்கண்டாகக் கருதி உட்கொள். அதனால் மெய்ப்பதம் காண்பாய்.

11. இப்போது நீ செய்கிற விவசாயத்தின் பயனை அடுத்த ஆண்டில் நீ அனுபவிப்பாய். நன்கு உழைத்துப் பாடுபடுவாயானால் நல்ல பயன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையும். அடுத்த ஆண்டு உனக்கு நலமாக இருக்கும். சோம்பலாக இருந்து பாடுபடாமல் பொழுது போக்குவாயானால் அடுத்த ஆண்டில் உனக்கு நன்மை இராது. அதுபோல் இந்தப் பிறப்பில் நீ செய்யும் நன்மைகளை மறுபிறப்பில் அனுபவிப்பாய். நன்மை செய்யாமல் சோம்பியிருந்து, தீங்கு புரிவாயானால், மறுபிறப்பில் உனது வாழ்வு சிறப்படையாது தாழ்வு அடையும்.

12. பிறவியைத் தருவது பற்றும் அவாவுமாகும் என்று அறி. பற்று என்பது:- உனது பொருளில் உள்ளம் வைப்பது. அவா (ஆசை) என்பது:- பிறர் பொருளில் ஆசை வைத்திருப்பதால் பெருங்கேடு வரும். முதலில் ஆசையைத் தொலைத்துவிடு பின்பு பற்றையும் ஒழித்துவிடு. "அற்றது பற்றெனில் உற்றது வீடு"

13. பணிவு என்ற பண்பு உன் வாழ்க்கையின் உயிர் நாடி. பணிவு இன்றி வாழ்பவனுடைய வாழ்க்கைத் திறம் நிச்சயமாக உயர்ச்சியடையாது.

14. இன்பமும் துன்பமும் உனது மனதிலிருந்து உண்டாகின்றன் மனமே பந்தத்திற்கும் முத்திக்கும் காரணமாகிறது. தீய மனம் நரகத்தைத் தருகிறது. நன்மனம் பரகதியைத் தருகிறது. மனத்தழுக்கு அற்றவரே பெரியார். மனத்துக்கண் மாசில்லாமல் இருந்தால் எல்லா அறங்களும் உண்டாகும். ஆதலினால் உன் மனம் பளிங்குபோல் இருக்கட்டும்.

15. ஒரு மனிதனை வெளித் தோற்றத்தை மட்டும் கண்டு நல்லவனென்றோ! தீயவனென்றோ! உறுதி செய்துவிடாதே, உள்ளத்தின் பண்பைக் கண்டு முடிவு செய். பலாப்பழம் முள்ளு முள்ளாக மேலே தோற்றமளிக்கும். உள்ளுக்குள் சுவையுள்ள சுளைகள் பல உண்டு. வீணை கோணல் - ஆனால் இனிய நாதமுண்டு. எட்டிப்பழம் மேலே பளபளவென்றிருக்கும் தொட்டாலே கசக்கும். நாவற்பழம் கருமை ஆன்னால் இனிக்கும். பாம்புக்குட்டி பளபள வென்றிருக்கும் கொடிய விஷத்தைத் தரும். அம்பு நேராக இருக்கும் உயிரை வாங்கும்.

16. உன் இனத்துடன் நீ ஒற்றுமையாக இரு. அப்போதுதான் உனக்கு உயர்வும் மதிப்பும் அழகும் உண்டாகும். உன் இனத்தை விட்டு நீ பிரிந்துவிட்டால் நீ எல்லோராலும் வெறுக்கப்படுவாய். தலையிலே மயிர் இருக்கும்போது அது எவ்வளவு அழகாக உள்ளது? இருண்டு, சுருண்டு, நெய்த்து மிக அழகாக அமைந்து மதிப்பும் அழகும் பெறுகிறது. ஆனால் தன் இனத்தை விட்டு ஒரு மயிர் தனித்து வேறுபட்டு வந்துவிடுமானால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது இகழ்வும் அருவருப்பும் அடைகிறது. இதனை நீ எண்ணிப் பார்த்து ஒற்றுமையாக இரு.

17. உனது மனைவி மக்களுக்கு நிரம்ப வேண்டும் என்று, பொய்யும் வஞ்சனையும் செய்து பொருளைத் தேடாதே. அப்படித் தேடுவதனால், நீ தேடிய பொருள் மனைவி மக்களையடைந்து அவர்களுக்கு தீமையை விளைவிக்கிறது. அதனால் வரும் பாவ மூட்டை உன் உயிருடன் தொடர்ந்து வருகிறது. உடம்புக்குச் சில ஆண்டுகள் தொடர்புடைய மனைவி மக்களுக்காகத் தீய வழியில் பொருள் ஈட்டி வைத்துவிட்டு, நீ கணக்கற்ற பாவத்தைச் சுமந்துகொண்டு போவது எத்துனைப் பெரிய மடமை? எண்ணிப் பார். அறநெறியில் பொருளை ஈட்டு.

## ஆன்ம சுத்தி

ஆடுகின்றிலை; கூத்து உடையான் கழற்கு
அன்பு இலை; என்பு உருகிப்
பாடுகின்றிலை; பதைப்பதும் செய்கிலை;
பணிகிலை; பாதமலர்
சூடுகின்றிலை; சூட்டுகின்றதும் இலை!
துணை இலி பிண நெஞ்சே!
தேடுகின்றிலை" தெருவுதோறு அலறிலை;
செய்வது ஒன்ற அறியேனே.

**– மாணிக்கவாசக சுவாமிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூரிய வழிபாடு

பூவுலகத்தில் சூரிய வழிபாடு இன்று நேற்று ஏற்பட்டதல்ல. ரிக்வேத காலத்துக்கும் முன்பிருந்தே இந்த வழிபாடு இருந்து வருகிறது. அசையும் பொருள்கள் அனைத்திற்கும் சூரியனே உயிர் தருகிறான் என்கின்றன, வேதங்கள்! சூரிய வழிபாடுபற்றியும் சூரிய வழிபாட்டினால் ஏற்படும் பலாபலன்கள் பற்றியும் விரிவாக அலசப்பட்டுள்ளது.

இந்த வழிபாடு எப்படி ஏற்பட்டது என்பது பற்றி நிச்சயமாக ஒன்றும் கூறமுடியவில்லை. கி.மு.2000-க்கு முன்பே சூரியன், அக்னி, வருணன் ஆகியோரை உலகத்தினர் வழிபட்டு வந்துள்ளனர்.நம்நாடு சூரிய வெப்பம் மிகுந்த நாடு. ஆகவே, அவன் அருளைப் பெற அவனை மக்கள் வழிபட முற்பட்டதில் வியப்பில்லை. பல நோய்களை சூரிய கிரணங்கள் குணப்படுத்துவதாக அதர்வண வேதம் குறிப்பிடுகிறது. உபநிஷத்துக்களும் புராண இதிகாசங்களும் சூரியனின் புகழைப் பேசுகின்றன. பிற தெய்வங்களைப் போல் அல்லாமல் சூரியன் கண்ணெதிரே தோன்றும் தெய்வமாக விளங்குகிறான்.

சூரியன் ஒரு கோள்! கிரகம்! அதைக் கடவுளாக வழிபடலாமா என்ற சந்தேகம் எழலாம். வேதம் ஒன்றுதான் இந்த சந்தேகத்தைப் போக்குகிறது. வேதமே, சூரியன் கோள மயமானதுதான் என்கிறது. வேதகால ரிஷிகள், "சூரியனே தண்ணீருக்கெல்லாம் ஆத்மா" என்று குறிப்பிடுகிறார்கள். சூரியனால் உலகத்துக்கு ஏற்படும் நன்மைகளையும் வேதம் வரிசைப்படுத்திக் கூறுகிறது.

வேதத்தில் காணும் உண்மைகள், நவீன விஞ்ஞான உண்மைகளுக்கு முரணாக இல்லை. சூரிய ஒளியில் நிறப்பிரிகை ஏற்பட்டால் ஏழு வண்ணமாகப் பிரிகிறது. ஏழு வண்ண ஒளியின் சேர்க்கையே சூரிய ஒளி. சூரியனுக்கு ஏழு குதிரைகள் என்று வேதம் வர்ணிப்பதன் சூட்சுமம் இதுவே. குதிரையை அசுவம் என்பர். அசுவம் என்ற சொல்லுக்கு வர்ணம் என்றும் பொருளுண்டு.

பாரசீகத்தில் தங்கிவிட்ட ஆரிய குலத்தினர் சூரியனை வழிபட்டார்கள் என்றாலும், அக்னிக்குத்தான் அவர்கள் முக்கியத்துவம் கொடுத்தார்கள். இந்தியாவுக்கு வந்த ஆரியர்கள் திராவிடர்களுடன் கலந்து விக்ரக ஆராதனையை மேற்கொண்டார்கள். சூரியனை விஷ்ணுவின் அவதாரமாக இவர்கள் கொண்டார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரிய வழிபாட்டினால் தோல் நோய், கண் நோய்கள் குணமாகிவிடும் என்று பாரசீகர்கள் நம்பினார்கள். பாரசீக மத குருக்களான மாகாஸ்கள், சூரிய வழிபாட்டின் மூலம் சிகிச்சை செய்யும் மருத்துவர்களாக விளங்கினர்.

பஞ்சாபை ஆண்ட மன்னன் ஒருவனுக்கு தோல் நோய் ஏற்பட்டது. அவன் மாகாஸ்களை வரவழைத்தான். நோய் குணமாகவே, இப்போது பாகிஸ்தானில் உள்ள "மூல்தான்" நகரில் அவன் சூரியனுக்காகவே ஒரு கோவில் கட்டுவித்தான். 2000 ஆண்டுகளுக்கு முன் கட்டிய இந்த ஆலயம்தான் பண்டைய இந்தியாவில் சூரியனுக்காக ஏற்பட்ட முதல் கோயில்.

இந்த ஆலயம் அவுரங்கசீப் காலத்தில் அழிவுற்றது. மூல்தானிலிருந்து சூரியவழிபாடு காஷ்மீருக்குப் பரவியது. பிரபல மன்னனான லலிதாதித்ய முக்தா பீடன் என்பவன் இங்கே சூரியனுக்கு ஒரு கோயில் கட்டினான். இந்தக் கோயில், கிரேக்க ஆலய அமைப்பில் கட்டப்பட்டது. பின்னர் வந்த இஸ்லாமிய மன்னன் சிக்கந்தர் பட்டீஸ்கான் (கி.பி.1391 – 1414) இந்தக் கோயிலை இடித்து நாசமாக்கி விட்டான்.

சூரியனுக்காகக் கட்டிய புராதனக் கோயிலில் ஒன்று ஒரிஸ்ஸாவிலுள்ள கொனார்க் கோயில். கலிங்கத்தை ஆண்ட நரசிங்க தேவன் (கி.பி.1238 – 64) இதைக் கட்டினான். இப்போது இந்தக் கோயிலின் ஒரு பகுதி மட்டுமே மிஞ்சியிருக்கிறது. இந்த ஆலயத்தில் உள்ள சிற்பங்கள் உலகில் வேறு எங்கும் காணக் கிடைக்காத வேலைப்பாடு மிக்கவை.

தமிழ்நாட்டில் கும்பகோணத்தை அடுத்துள்ள சூரியனார் கோயில் என்ற இடத்தில் சூரியனுக்கென்று தனி ஆலயமே இருக்கிறது.
சூரியனைப் பரம்பொருளாக "ஆதித்ய ஹிருதயம்" கூறுகிறது. "மார்க்கண்டேய புராணம்", "பவிஷ்ய புராணம்" முதலியவை சூரிய வழிபாட்டை விவரிக்கின்றன. மந்திரங்களில் மிக சக்தி வாய்ந்ததாகக் கருதப்படும் "காயத்ரி" சூரியனுக்கு உகந்த மந்திரம்.
"சூரிய நமஸ்காரம்" என்பது உடற் பயிற்சி, யோகப் பயிற்சியுடன் கூடிய வழிபாடு. இன்று இது மேல்நாட்டிலும் பரவியுள்ளது.
சூரிய வழிபாடு "சௌர மதம்" என்ற பெயரில் ஷண்மதங்களுள் ஒன்றாக இருந்து வந்திருக்கிறது. சௌர மதம் ஒரு காலத்தில் உலகளாவிய மதமாகவும் பரவியிருக்கிறது. ரோமில், கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் கிறிஸ்துவ மதத்தையே சௌரம் எதிர்த்து நின்றது. கி.மு.1400–ஆம் ஆண்டு முதலே மத்திய கிழக்கு நாடுகளிலும் அது பரவியிருந்தது. எகிப்தில் சூரியனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ரே" அல்லது 'ரா-அதுன் என்று குறிப்பிட்டார்கள். எகிப்திய அரசர்கள் தங்கள் பெயரோடு 'ரே" என்ற பெயரையும் சேர்த்துக் கொண்டார்கள்.
ஆதிகாலத்தில் சௌர மதத்தினர் சூரியனுக்கு ரத்த அர்க்கியம் கொடுத்து வழிபட்டார்கள். ஆதிசங்கரர்தான் இதை மாற்றினார்.
தை மாதம் முதல் நாள் – சூரியன் மகர ராசிக்குள் (உத்தராயணம்) பிரவேசிக்கும் நாள் பொங்கல் பண்டிகையாக கொண்டாடப்பட்டு சூரிய வழிபாடு நடத்துகிறார்கள். கீதையில் கண்ணபிரான் 'ஜ்யோதிஷம் ரவிர் சும் சுமான்' என்று கூறி, ஜ்யோதிகளில் தாம் சூரியனாக இருப்பதாகத் தெரிவிக்கிறார்.

எனினும் சூரியனை சிவசூரியன் எனும் பெயரில் சிவரூபமாகவும் குறிப்பிடுகின்றனர். சிவபெருமானின் அஷ்ட மூர்த்தங்களில் ஞானக்கண் உடைய ஒருவராகவும் சூரியன் கருதப்படுகிறார்.

அந்தக் காலத்தில் ரிஷிகள் சூரியனின் கனிந்த ஒளியிலே நாள் தவறாமல் திளைத்து வந்தார்கள். சூரிய கிரணங்களை "ஜீவத்திறல்" என்றும் "ஆயுளை வளர்க்கும் அன்னம்" என்றும் போற்றினார்கள். அவர்கள் உடல், உள்ளம், உயிரில் தேவசக்தியும் தெய்வ ஒளியும் துள்ளின.

சுற்றும் உலகுக்கே சூத்திரமாக விளங்கும் சூரியனின் பெருமை இன்று சுருங்கிப்போய்விட்டது. என்றாலும், பொங்கல் திருநாளில் மட்டும் ஆதித்தனைப் போற்றும் பழக்கம் இன்றும் தொடர்கிறது!

**வெற்றிகளை குவிக்கும் சூரிய வழிபாடு**

உத்தராயண புண்ணிய காலத்தின் முதல் மாதம் தை மாதம். சூரியன், சனீஸ்வரரின் வீடான மகர ராசியில் சஞ்சரிக்கும் காலத்தில் வளர்பிறை ஏழாம் நாள் சூரிய ஜெயந்தி கொண்டாடப்படுகிறது. சப்தமி எனும் ஏழாம் நாளில் வருவதால் ரத சப்தமி என எல்லோராலும் அறியப்படுகிறது. நவக்கிரகங்களின் நாயகன் என்றழைக்கப்படுபவர் சூரியன். சகல ஜீவ ராசிகள், பயிர் பச்சைகளை தன் ஒளிக்கதிர்களால் வாழ வைத்துக் கொண்டிருக்கும் முதன்மை கிரகம். ஆட்சி, அதிகாரம், தலைமைப் பதவி, ஆளுமை போன்றவற்றின் கர்த்தா.

ஜாதக அடிப்படையில் சூரியன் தயவு இல்லாமல் தலைமைப் பொறுப்புக்கு யாரும் வரமுடியாது. **SLAS, SLPS** அதிகாரிகள், அதிகார மையங்கள், தலைமை செயலாளர்கள் ஆகியவற்றில் பணிபுரிய சூரியனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுக்கிரகம் அவசியம். அத்தகைய சர்வ ஆதிக்கமும், அதிகாரமும் உடைய சூரிய பகவானுக்கு உகந்த நாள் இந்த ரத சப்தமி. ரத சப்தமி புண்ணியம் மிக்க நாளாக சாஸ்திரங்கள் கூறுகின்றன. அன்றைய தினம் அதிகாலையில் எழுந்து கிழக்கு நோக்கி சூரியனை பார்த்து வணங்கியபின், தாய், தந்தையரை வணங்கி ஆசி பெறுவது இந்துக்களின் முக்கிய வழிமுறையாகும். அன்றைய தினம் குளிப்பதற்கு முன்பு ஏழு எருக்கம் இலைகளை தலை முதல் கை, தோள்பட்டைகள், காதுகள் என வைத்து சூரிய பகவானை பிரார்த்தித்து தலையில் நீர் ஊற்றிக் கொள்ள வேண்டும்.எருக்கன் இலை என்பது அருக்கன் இலை என்பதில் இருந்து மருவி வந்துள்ளது. அருக்கன் என்றால் சூரியன். இந்த இலையில் சூரியனின் சாரம் உள்ளது. எனவேதான் ஆண்டுக்கு ஒருமுறை எருக்கன் இலை வைத்து குளிக்கும் வழிபாடு ஏற்பட்டது. சூரியனுக்கு பல்வேறு விதமான பெயர்கள் உண்டு. தினகரன், பாஸ்கரன், அருக்கன், சூரிய நாராயணன் என பல காரணப் பெயர்கள் உண்டு. இதில் சூரிய நாராயணன் என்ற பெயர் விஷ்ணுவை குறிப்பதாகும். இந்த ரத சப்தமி நாளில் எல்லா வைணவ தலங்களிலும் சிறப்பு பூஜைகள், வழிபாடுகள், உற்சவங்கள் நடைபெறும். திருப்பதியில் அதிகாலை சூரிய உதயத்தில் தொடங்கி சூரிய அஸ்தமனம் வரை எந்த நாளும் இல்லாத வகையில் பெருமாள் சப்த வாகனங்களில் அமர்ந்து அருள் பாலிப்பார்.

முதலில் சூரிய பிரபையில் ஆரம்பித்து, சேஷ வாகனம், கருட வாகனம், அனுமந்த வாகனம், கற்பக விருட்ச வாகனம், சர்வ பூபால வாகனம், கடைசியாக சந்திர பிரபையில் எழுந்தருளி நாள் முழுவதும் சேவை சாதிப்பார். இந்த நாள் அள்ள அள்ள குறையாத அட்சய பாத்திரம்போல் புண்ணிய பலன்களை தரும் நாளாக புராணங்கள் போற்றுகின்றன. இந்நாளில் துவங்கும் புதிய முயற்சிகள், அரசாங்க விஷயங்கள், முக்கிய சந்திப்புக்கள். தொழில், வியாபாரம் ஆரம்பித்தல் எல்லா சுப விஷயங்களுக்கும் பிள்ளையார் சுழி போடுதல் போன்றவை வெற்றிகரமாக முடியும். தியானம், மந்திரஜெபம், யோகா, கல்வி, கலை, பயிற்சிகள் போன்றவற்றை துவக்குவதற்கு நல்ல நாளாகும். இன்று செய்யப்படும் தானங்கள், தர்மங்கள், உதவிகள் ஒன்றுக்கு பத்தாக புண்ணியத்தை சேர்க்கும்.

**வழிபாடு –பரிகாரம்**

தினசரி சிவாலய வழிபாடும், சூரிய நமஸ்காரமும் நல்ல பலன் தரும். தினசரி ஆதித்ய ஹ்ருதய ஸ்தோத்திரம் படிக்கலாம். கோதுமையில் செய்த சப்பாத்தி, கோதுமை ரவை போன்றவற்றை இல்லாதோர், நோயாளிகளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரலாம். கோதுமை பலகாரத்துடன் பழங்கள், கீரை சேர்த்து பசுவுக்கு கொடுக்கலாம். தினசரி சூரிய காயத்ரி மந்திரம் 108 முறை சொல்லி வரலாம். ஓம் அம் நமசிவாய சூரிய தேவாய நம என்ற மந்திரத்தை 108 முறை சொல்லலாம். சூரிய தலமான ஆடுதுறை சூரியனார் கோயிலுக்கு சென்று வரலாம். நவதிருப்பதிகளில் திருநெல்வேலி அருகே உள்ள ஸ்ரீவைகுண்டம் சூரியனுக்குரிய பிரார்த்தனை தலமாகும். ரத சப்தமி மற்றும் ஒவ்வொரு மாதம் வரும் வளர்பிறை சப்தமியில் பெருமாள் ஆலயங்களுக்கு சென்று பிரார்த்திக்கலாம்–

சூரியனின் அம்சங்கள் (ஆதிக்கம்)

| | | |
|---|---|---|
| கிழமை | : | ஞாயிறு |
| தேதி | : | 1, 10, 19, 28. |
| நட்சத்திரம் | : | கிருத்திகை, உத்திரம், உத்திராடம். |
| தமிழ் மாதம் | : | சித்திரை, ஆவணி |
| ராசி | : | சிம்மம் |
| உச்சம் | : | மேஷம் |
| நீசம் | : | துலாம் |
| நிறம் | : | சிவப்பு |
| ரத்தினம் | : | மாணிக்கம் (சிவப்பு) |
| தானியம் | : | கோதுமை |
| ஆடை | : | சிவப்பு |

நன்றி : ஜோதிட முரசு

# ஆன்ம சுத்தி

அறிவு இலாத எனைப், புகுந்து ஆண்டுகொண்டு.
அறிவதை அருளி, மேல்
நெறி எலாம் புலம் ஆக்கிய எந்தையைப்
பந்தனை அறுப்பானைப்
பிரிவு இலாத இன் அருள்கள் பெற்றிருந்தும்
மாறு ஆடுதி; பிண நெஞ்சே!
கிறி எலாம் மிகக், கீழ்ப்படுத்தாய்;
கெடுத்தாய் என்னைக் கெடுமாறே.

– மாணிக்கவாசக சுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னாலய அமைப்பு

இலங்கையின் சிறப்புக்களைக் கம்பர் நன்கு புகழ்ந்துள்ளார். சுவர்க்கத்தின் நலன்களை எல்லாம் இலங்கை கொண்டுள்ளதால் சுவர்க்கத்தின் கண்ணாடி இலங்கை என்பது கம்பர் கருத்தாகும். இத்தகைய சிறப்புடைய இலங்கையின் முகம்போல விளங்குவது யாழ்ப்பாணமாகும். யாழ்ப்பாணத்தின் திலகம்போலப் பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோவில் விளங்குகின்றது.

யாழ். நகரிலிருந்து ஒன்பதாவது மைல் தூரத்தில் விளங்கும் பொன்னாலைக் கிராமத்தின் மேற்குத் திசையில் கிராமத்தைப் பார்த்தவாறு ஸ்ரீ வதராஜப் பெருமாள் கோவில் அமைந்துள்ளது. கோவிலின் முன்னும் பின்னும் பல ஆலயங்கள் விளங்குகின்றன. காரைநகரின் சிறப்புத் தலமாய், ஈழத்துச் சிதம்பரமென அழைக்கப்படும் சிவாலயம் பொன்னாலைக் கோவிலின் நேர் மேற்கே விளங்குகின்றது. பொன்னாலைக் கோவிலின் கிழக்கே மூளாய் சித்தி விநாயகர் கோவில், பறாளாய் முருகமூர்த்தி கோவில் முதலியன அமைந்துள்ளன. கடலும் கடல் சார்ந்த நிலமுமாகிய நெய்தல் நிலமும், காடும் காடு சார்ந்த நிலமுமாகிய முல்லை நிலமும் ஆலயத்தின் இருமருங்கிலுமுள்ளன. நெய்தல் நிலப் பண்பைக் கோவிலின் சமீபத்தில் உண்டாக்கும் கடல் வட திசைக்கண் உள்ள காட்டின் புறமாகத் திருவடிநிலைத் தீர்த்தம் என்னும் சமுத்திர மாக விளங்குகின்றது. இவ்விடத்திலேயே இந்திரன் பொருட்டு நாராயணன் காட்சி வழங்கினார் என்பது புராணக் கருத்தாகும். தீர்த்த விழாக் காலங்களி லெல்லாம் பெருமாள் இவ்விடத்திற்கு எழுந்தருளியே தீர்த்தத் திருவிழா நடைபெறும்.

வரதராஜப் பெருமாள் கோவிலின் கோபுரவாயிற் பிள்ளையார் கோவில் ஆலயத்தின் முன் சுமார் கால் மைல் தூரத்தில் விளங்குகின்றது. ஏழு வீதிகளுடன் இவ்வாலயம் விளங்கிய காலத்தில் இப் பிள்ளையார் கோவில் உள்ள இடமே ஏழாவது கோபுரம் விளங்கிய இடம் என்பர்.

கோபுரம் அமைந்திருந்த இடமாகிய பிள்ளையார் கோவிலுக்கு முன் குளமும் வயல்களும் அமைந்துள்ளன. இக் குளமும் வயல்களும் மருதநிலப் பண்பின் அறிகுறியாய் விளங்குகின்றன. ஏழாவது கோபுர வாயிலில் நெல் வயல்கள் விளங்குவது காத்தற் கடவுளாகிய நாராயணன் உயிர்களுக்கு உணவளிப்பதற்காக நெல்வயல்களை வைத்திருக்கின்றார் என எண்ணச் செய்கின்றது.

கோபுரவாயிற் பிள்ளையார் இருந்த காரணத்தால் பொன்னாலை வரதராஜப்பெருமாளை வழிபடச் செல்வோர் அனைவரும் இப்பிள்ளையாரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணங்கியே செல்வர். இப்பண்பு காலம் காலமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. வருடத் திருவிழாக்களில் முதலாவதாக வருவதும் பழைய காலந்தொட்டு நடைபெற்று வருவதுமான ஆவணிப் பெருந்திருவிழாவுக்கான கொடியேற்றத்துக்கு முதலாவது நாள் இப் பிள்ளையாருக்குத் திருவிழாச் செய்த பின் தான் திருவிழாவுக்கான ஆரம்பக் கிரியைகளைச் செய்வர்.

பிள்ளையாரை வணங்கிச் செல்பவர் ஆலயத்தைச் சமீபித்ததும் தேர்முட்டிக்கு முன்பாக விளங்கும் வைரவப் பெருமானைக் காண்பர். இவ் வாலயத்தில் உள்ள போன்ற பெரிய அழகிய வைரவ மூர்த்தத்தை வேறெங்கும் காணமுடியாது. திருவிழாக் காலங்களிலெல்லாம் இவ் வைரவப் பெருமானுக்கு விசேட பூசை நடைபெறும். பிற ஆலயங்களில் திருவிழா முதலியன ஆரம்பிப்பதற்கு முன் செய்யப்படும் வைரவ சாந்தியாகிய கிராமசாந்திக் கிரியைக்குப் பதிலாக இங்கு இவ் வைரவப் பெருமானை வழிபடுவதே வழக்கம். இவ் வழக்கத்திலிருந்து இவ் வைரவர் கோவிலுக்கும் வரதராஜப் பெருமாள் கோவிலுக்குமுள்ள தொடர்பை அறியலாம்.

இவ் வைரவக் கடவுளை வணங்கியபின் பெருமாள் கோவில் கோபுரவாயிலை வணங்கி வலமாக வருபவர்கள் தெற்கு வீதியில் அமைந்திருக்கும் சந்தான கோபாலராகிய நாகதம்பிரானை வணங்கலாம். நாகதோஷத்தினால் பிள்ளைப்பேறு முதலியன இன்றி வருந்துபவர் நாகசாந்தி முதலிய வழிபாடுகளால் இந்நாகதம்பிரானை வழிபட்டு நாகதோஷம் நீங்கி நன்மையடைந்துள்ளனர். ஆனி உத்தரதினம் நாகதம்பிரான் பொங்கல் நடைபெறும். அப்பாற் சென்றால் திருவிழாக் காலங்களில் புறப்பட்டு அருள்செய்பவரான ஸ்ரீநிவாச வரதராஜப் பெருமாளைத் தரிசிக்கலாம். கலையழகும், அருட்களையும் மிக்க இப் பெருமாள் தன்னை வணங்குவார் உள்ளத்திற் சுலபமாக இடம்பிடிப்பார். மிக்க பழமைவாய்ந்த இம்மூர்த்தியின் சிற்ப நுட்பத்தையும் சிறப்பையும் பாராட்டாத அறிஞர்கள் இல்லை.

எழுந்தருளும் நாயகரான பெருமாளை வணங்கி அப்பாற் சென்றால் மூலவர் எழுந்தருளியிருக்கும் கோவில் விமானத்தைக் காணலாம். பல்வேறு சிற்பங்களுடன் மனத்தைக் கவரும் பாங்கில் உள்ள இவ் விமானம் நாராயணனின் பொன் முடியோ என எண்ணும்படி விளங்குகின்றது. இவ் விமானத்தை வணங்கியபடி வீதியின் தென்மேற்குத் திசையை அடைந்தால் மகாலட்சுமியைத் தரிசிக்கலாம். இலக்குமியின் சிறப்பையும், அருளையும் எல்லோரும் அனுபவிக்கத்தக்க விதத்தில் இம் மகாலட்சுமி அம்பாளுக்குச் சில வருடங்களுக்கு முன்கோடியர்ச்சனை நடைபெற்றது. மணமாகாதவர்கள் இலக்குமிக்குப் பொட்டுச் சாத்தியும் நாராயணனுக்கு மாலை அணிந்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபட்டு மணப்பேற்றை அடைகின்றனர். மாதந்தோறும் வரும் அனுஷ நட்சத்திரத்தில் மகாலட்சுமி அம்பாளுக்கு விசேட பூசை நடைபெறுகின்றது.

மேற்கு வீதியில் சீதா லக்குமணருடன் உள்ள இராமபிரானின் கோவில் உள்ளது. ராம நவமிக் காலங்களில் விசேட வழிபாடுகள் நடைபெறும். இராமர் கோவிலுக்கருகில் பூமிலக்குமி ஆலயம் உள்ளது. இவ்வாலயத்தில் பூமிலக்குமியின் அவதாரமான ஆண்டாளும் எழுந்தருளியிருக்கின்றார். ஆண்டாள் ஆலயம் உண்டான நாளிலிருந்து ஆலயத்தை 108 முறை வலம்வரும் வழிபாடு நடைபெறுகின்றது. இவ்வழிபாட்டால் நாராயணனின் அருள் பெற்றோர் அனேகர்.

ஆலயத்தின் வடமேற்குத் திசையில் சனிபகவானின் ஆலயம் உள்ளது. இவர் கீர்த்திமிக்கவர். சனிக்கிழமைகளில் எள் நைவேத்திய நிவேதனம், எள் தீபம் ஏற்றி வழிபடுதல் முதலிய செய்து சனிதோஷம் நீங்கப்பெற்றவர் அநேகர்.

திருமாலின் ஒவ்வொரு அவதாரத்திற்கும் கிரகங்களில் ஒவ்வொன்றுடன் தொடர்புண்டு என்பர். அவ்வகையில் கூர்மாவதாரத்திற்கும் சனிக் கிரகத்திற்குமே அதிக தொடர்பு கூறப்படுகின்றது. அந்த வகையில் இவ்வாலயத்தில் செய்யும் சனி வழிபாடு விசேடமுடையதாயுள்ளது.

ஆலயத்தின் வடக்கு வீதியில் தீர்த்தக் கிணறும் தலவிருட்சமான வன்னி மரமும் நவக்கிரக கோவிலும் விளங்குகின்றன. ஒன்பது கிரகங்களினதும் குறைபாடுள்ளவர்களும் குறிப்பிட்ட சிலவற்றின் குறைபாடு உடையவர்களும் தமது சக்திக்கும் கிரக நிலைகளுக்கும் ஏற்ப அபிஷேகம், அர்ச்சனை, சாந்தி என்பன செய்து பயன்பெறுவதும் இவ்வாலய வழிபாடுகளிற் சிறப்பான அம்சமாகும். பெருமானின் திருவுரு மிக வசீகரமானதாகவும், தெய்வீகப் பொலிவுடையதாகவும் உள்ளது.

சமீபத்தில் அமைக்கப்பெற்ற இத்திருவுருவின் வரலாறு மிகவும் தெய்வீகமானதாகும். பூசகர்களுள் ஒருவரான பிரம்மஸ்ரீ சுப்பையாக் குருக்களின் கனவில் ஆலயம் அமைக்கும்படி பணித்த பகவான் தன் திருவுருவை உருவாக்கும்போதும், ஆலயத்தை அமைக்கும்போதும், கும்பாபிஷேகத்தை நிகழ்த்தும்போதும் பல சந்தர்ப்பங்களில் தோன்றாத் துணையாயிருந்து அருளியிருக்கின்றார். வருடந்தோறும் மார்கழி மாதத்தில் வரும் வைகுண்ட ஏகாதசியன்று அனந்தசயனப் பெருமானைத் தரசித்துப் பரவசப்படுவதற்காகவே பெருந்தொகையான அன்பர்கள் வருவர். அனந்தசயனப் பெருமானின் கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து ஆலயம் மிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருட்பொலிவும் எழுச்சியுமுடையதாக விளங்குகின்றது.

அனந்தசயனப் பெருமான் ஆலயத்துக்குக் கிழக்கே வசந்த மண்டபமும் அதையடுத்து யாகசாலையும் அமைந்துள்ளன. வசந்த மண்டபத்திற்கு மேலும் யாகசாலைக்கு மேலும் உள்ள ஓவியங்கள் பழைமையானவை - கீதோபதேதசக் காட்சி பாரதப் போரை ஞாபகம் செய்யும் அமைப்பில் உள்ளது. சிற்பங்கள், ஓவியங்களைப் பொறுத்த அளவில் தெற்குவீதிச் சுவரில் அமைக்கப்பட்டுள்ள கஜேந்திர மோட்சம், பன்னிரண்டு ஆழ்வார்கள், தசாவதாரம் என்பன ஆலயத்தின் கலையழகை மிகுவிப்பனவாக விளங்குகின்றன. யாகசாலைக்குத் தெற்கில் ஆஞ்சநேயரின் ஆலயம் உள்ளது. சிறிய அமைப்பில் உள்ள இந்த ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் ஆஞ்சநேயமூர்த்தியின் கீர்த்தி மிகப் பெரியதாகும். நாராயணனின் அடியார்களுக்கு வரும் இடர்களைப் போக்குவதிலும் திருப்பணி செய்வோருக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதிலும் விரைந்து அருளும் பெருமை உடையவர் அனுமார். ஆவணிமாததத்துக் கடைசி ஞாயிறுன்று ஆஞ்சநேயருக்குச் சிறப்பான பொங்கல் வழிபாடு நிகழும்.

இப்படியான உட்பிரகாரத்தை வலம் வந்து மூலவர் சன்னிதியில் கொடித்தம்பம், பலிபீடம், கருடாழ்வார் என்பனவற்றைத் தரிசித்து மூலவரை வணங்கலாம். தம்பமண்டபத்தின் மேற்சுவரில் விநாயகர், இருந்த கோலத்தில் நாராயணன், முருகன் ஆகிய கதைச் சிற்பங்களையும் காணலாம். மூலஸ்தானத்தில் மண்மடந்தை, பொன் மடந்தை இருபாலும் திகழ மணப்பந்தலில் நிற்பதுபோலப் பொலிவான காட்சியுடன் நாராயணனைக் கண்டு தொழலாம். பூசை நடைபெறும்போது தரிசனம் செய்தால் மூலவருக்குப் பஞ்சாலத்தி உபசாரம் நடைபெற்றபின் கூர்மானவதாரத்திற்கும் பஞ்சாலத்தி காட்டுவதைக் காணலாம். இக்கூர்ம மூர்த்தியே வலைஞனாகப் பிறந்த இந்திரனால் கரைக்குக் கொண்டுவரப்பட்டது என்பதும், இதைத் தீண்டிய உடனேயே இந்திரன் சபாவிமோசனம் அடைந்தான் என்பதும் புராணத்தில் கூறப்பட்டதாகும். இந்திரன் சபாவிமோசனமடைந்தபின் சிலையாக மாறிய நிலையிலுள்ளது கூர்மம். இவ்வாமையுரு கல்லால் உருவாக்கப்பட்டதோ எனச் சந்தேகம் கொள்ளத் தேவையில்லாதபடி இயற்கை ஆமையின் அடிவயிறு முதுகு ஓடுகளின் இயல்பு இதிலுங் காணக்கூடியதாக உள்ளது.

ஆலயத்தின் மேற்கே உள்ள காட்டில் ஒரு பெரியவரின் சமாதி அமைந்துள்ளதும் பூசாகாலங்களில் ஆகாயத்தில் கருடன்கள் வட்டமிடுவதும் இத்தலத்தின் மகத்துவத்தை நாம் நன்குணரச் செய்வனவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்னாலை தெல்லிப்பழை திருவருள்மிகு வரத்தலம் கற்பக விநாயகர் ஆலயம்

**அமைவிடம்**

ஈழத்தின் வடபால் யாழ்ப்பாணத்தில், தெல்லிப்பழைப் பிரதேசத்தில் தெல்லிப்பழைச் சந்தியிலிருந்து மேற்காக 2km தூரத்தில் அமைந்துள்ள பன்னாலைக் கிராமத்தின் நுழைவாயிலில் அமைந்திருப்பதே தெல்லிப்பழை பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் ஆலயமாகும்.

**வரலாறு**

ஐந்துதள இராஜகோபுரத்துடன் அழகிய சிற்பங்கள் நிறைந்த அலங்கார முகப்பு வளைவுடனும் தற்போது காட்சியளிக்கும் இவ்வாலயம் ஆதியில் 9ம் நூற்றாண்டில் சோழ இளவரசி மாருதப்புரவீகவல்லியால் தாபிக்கப்பட்ட ஏழு விநாயகர் ஆலயங்களுள் ஒன்றாகும்.

குன்மநோயினால் குதிரை முகத்தினளாக விளங்கிய மாருதப்புரவீகவல்லி தனது நோயினை நீக்கும் பொருட்டு கீரிமலைச் சாரலில் வந்திறங்கி நகுலமுனிவரின் ஆலோசனைப்படி கண்டகி தீர்த்தத்தில் நீராடி நகுலேஸ்வரப் பெருமானை வழிபட்டு முனிவரின் வேண்டுதலின்படி மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலைக் கட்டுவித்து முருகப் பெருமானையும் வழிபட்டு குதிரை முகம் நீங்கப்பெற்றாள்.

எனினும் தனது பார்வையில் குதிரை முகம் நீங்கப் பெறாமை கண்டு இது பற்றி தவமுனிவரிடம் பிரஸ்தாபிக்க அவர் எக்காரியத்திலும் விநாயகர் வணக்கம் முதன்மையானது; அதனை மேற்கொள்ளாததால் இவ்வினை வந்ததாக எடுத்துக்கூற அவள் தனது தவறை உணர்ந்து விநாயகரை வணங்கி ஏழு விநாயகர் ஆலயங்களை தாபித்து வழிபட்டாள் என்பது வரலாறு.

ஆரம்பத்தில் வன்னி மரத்தின் கீழ் தாபிக்கப்பட்ட விநாயகரை பின்பு கற்பக நாச்சி என்னும் அம்மையார் வழிபட்டு வந்தார். போர்த்துக்கேயர்களால் முற்றாக அழிக்கப்பட்ட இவ்வாலயம் ஆங்கியேர் காலத்தில் புனரமைக்கப்பட்டு 1872ம் ஆண்டில் முதலாவது கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. பின்பு 1956, 1977, 2004 ஆகிய ஆண்டுகளில் கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆலய அமைப்பு

தற்போது மூலமூர்த்தியுடன் கஜலட்சுமி, சந்தானகோபாலர், வள்ளி, தெய்வயானை சமேத முருகப்பெருமான், நவக்கிரகங்கள், சண்டேசுவரர் ஆகிய பரிபால தெய்வ சந்நிதிகள் அமைக்கப்பட்டுள்ளது. கோயில் அமைப்பிற்குரிய மண்டபங்களான கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகா மண்டபம் என்பனவும் அமைக்கப்பெற்றுள்ளதுடன் திருமஞ்சனக்கிணறு மடப்பள்ளியறை, களஞ்சிய அறை, வாகனசாலை என்பனவும் உண்டு.

2014ஆம் ஆண்டு 43 அடி உயர ஐந்து தள இராஜகோபுரம் அமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. பின்பு 2017ஆம் ஆண்டு முன் வாயில் அலங்கார முகப்பு வளைவு அமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது.

### மஹோற்சவம்

ஆலய மஹோற்சவம் ஆவணி மாதத்தில் வரும் அமாவாசைத் திதியை இறுதித் தீர்த்த தினமாகக் கொண்டு பன்னிரண்டு நாட்கள் மிகவும் சிறப்பாக நடைபெறும். மஹோற்சவத்தில் கொடியேற்றம், சப்பறம், தேர், தீர்த்தம் என்பன சிறப்பான விழாக்களாகும். மகோற்சவ காலங்களிலும் ஏனைய விசேட திருவிழாக்காலங்களிலும் அன்னதான சபையினர் அடியார்களுக்கு உணவளிக்கும் பணியினை மிகவும் சிறப்பாக மேற்கொண்டு வருகின்றனர்.

### நித்திய நைமித்திய பூசைகள்

ஆலயத்தில் இரண்டு நேர நித்திய பூசைகள் நடைபெறுவதோடு வெள்ளிக்கிழமைகளில் விசேட அபிஷேக அலங்காரங்களுடன் விநாயகர் உள்வீதி வலம் வருவார். சித்திரை வருடப்பிறப்பு, ஆவணி சதுர்த்தி, புரட்டாதிச் சனி வாரம், நவராத்திரி, கேதார கௌரி விரதம், கார்த்திகை விளக்கீடு, பிள்ளையார் கதை, திருவெம்பாவை என்பன விசேட விழாக்களாகும்.

### ஆலய நிர்வாகம்

ஆலய ஆதீனகர்த்தாக்களில் ஒருவராக பிரம்மஸ்ரீ ம.மகேந்திரசர்மா அவர்கள் இருப்பதோடு ஆலய நிர்வாகத்தையும் அவரே சிறப்புற இயக்கி வருகிறார்.

### புகழ்மாலை

இவ்வாலயத்தின் மூலமூர்த்தியான விநாயகர் மீது காலத்திற்கு காலம் பாடப்பட்ட பல புகழ் மாலைகள் உள்ளன. அவற்றுள் விநாயகர் திரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊஞ்சல் (கனகசபைப்புலவர்), விநாயகர் இரட்டை மணிமாலை (கவிஞர் செ.கதிரேசர்பிள்ளை), விநாயகர் திருப்பதிகம் (அருட்கவி.சி. விநாசித்தம்பிப் புலவர்), விநாயகர் பரத்துவமாலை (அருட்கவி சி. விநாசித்தம்பிப் புலவர்) ஆகியன குறிப்பிட்டுக் கூறக்கூடியன.

ஆலயத்தில் மேலும் திருப்பணி வேலைகள் நடைபெறுவதுடன் விநாயகர் அருளால் ஆலயம் வளர்ச்சியடைந்து செல்கிறது.

சண்முகலிங்கம் சஜீவன்,
பன்னாலை, தெல்லிப்பழை.

## நவராத்திரி நாயகிகள்

வல்லமை தந்திடும் மலைகளை
வாழ்த்திப் போற்றி வலுவடைவோம்
நல்ல பொருள் தரும் அலைமகளை
நாமம் சொல்லி வாழ்த்திடுவோம்
கல்வி தந்திடும் கலைமகளை
காலமெல்லாம் போற்றிடுவோம்
எல்லாம் பெற்றே இன்பமுற
என்றும் பணிவோம் இவர் பதமே.

திங்களைச் சூடியோன் தேவி போற்றி
தேவி பார்வதித் தாயே போற்றி
சங்கு கொண்டவன் துணையே போற்றி
செல்வமெல்லாந் தரும் திருவே போற்றி
தங்கும் கல்விக் கரசியே போற்றி
தாயே வாணியுன் தாளே போற்றி
மங்களந் தந்திட வருவீர் போற்றி
முப்பெரும் தேவிகாள் போற்றி போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்த்தம் உணர்ந்து அறி

வல்லமைகள் கோடி வரமாய்த் தரும் சக்தி
தொல்லை துயர்கள் துடைப்பாள் – "இல்லை
எவரு" மென அஞ்சாதே! ஈடில்லா அன்னை
அவளே துணையாம் அணை!

அணுவின் இயக்கம் அனைத்தினதும் ஆற்றல்
உணர்வுயிரின் தூண்டல் உடலின் – இணக்க
அசைவிவற்றின் மூலம் அருட்சக்தி! வாழ்வின்
விசையுமவள் : சொல்வாள் விதி!

தாயொருத்தி... ஆனால் தனம் கல்வி வீரத்தை
சேய்களுக்கு ஊட்டத் திரிசக்தி – ஆகி
அருள்வாள்! உனது அகப்புறச்சீர் ஓங்க
பொருளாவாள் வாழ்த்து புரிந்து.

பெண்மைக்குள் இந்தப் பிரபஞ்சம் உள்ளதெனும்
உண்மை உரைக்கும் ஒளிச்சுடராய் – கண்பறிக்கும்
துர்க்கையின் லட்சுமியின் தூயள் சரஸ்வதியின்
அர்த்தம் உணர்ந்து அறி!

முப்பெரும் தேவியர்க்கும் மும்மூன்று நாட்களாக
அப்பழுக் கற்று அமைந்தவிழா – இப்போது!
சுண்டல் அவலுண்டு சொல்மூவர் நாமத்தை!
வண்ணம் பெறுமேயுன் வாழ்வு.

"ஞானமும் வீரமும் நற்திருவும் பெற்றமகன்
வானாழ்வான்" என்பதனை மண்ணுணர – மூவருடு
காட்டும் விழாவில் கலைசுவைத்துச் சக்திபெறு!
மீட்டுஎடு உன்னை விரைந்து.

த. ஜெயசீலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுமைகளா

குருத்தோலை சிரிக்கிறது கருவி வாடி
குறளுங் கா வோலையதன் முதுமை கண்டு
சிரிக்கிறது காவேலை குருத்து ஓலை
சீக்கிரமே முதிருமென்ற உண்மை தேர்ந்து!
"குருத்தோலை – காவோலை" இளமையிற்கும்
சுழைவரும் முதுமைக்கும் உவமை என்று
புரிந்தவர்கள் சிரிக்கார்கள்! வாழ்வின் அர்த்தப்
பொருளுணர்ந்தோர் ஜெயிப்பார்கள் இவற்றை வென்று!

இளமையிலே துடிப்பிருக்கும் அனுப வங்கள்
இன்றி.... முழுவெற்றி அது காணா தாடும்.
கிழப்பருவம் அனுபவத்தால் சீறும் – வெற்றிக்
கிளையேற பலம் இலாது அதுவும் வாடும்!
இளமையதும் முதுமையதும் வாழ்வின் ரெண்டு
எல்லை! இவை சரியாக இயங்கும் நாடே
வளர்ந்துயரும்! மாண்புகளில் சிறந்து பொங்கும்!
மனங்கொண்டால் நசம் சமூகம் வாகை கொள்ளும்!

சிறுவர்கள் தினம், முதியோர் தினத்தில் மட்டும்
சிந்தித்து கட்டுரைகள் கவிதை செய்து
மறுதினமே மறந்து போனால்.... சமூகத்தின் மேல்
மலைச்சுமை களாய் "அவரின்" பாரம் ஏறும்!
பொறுப்புள்ள தலைவர்காள் முதியோர் தம்மின்
குறைநிரப்பி அவராலே பயனுங் கொண்டால்
குலத்தின் மலைச் சுமை பஞ்சா(கு)ம் குடியும் ஓங்கும்!

த. ஜெயசீலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூரண மனிதன்

செஞ்சொற்செல்வர்

மனிதன் பூரண மனிதனாக, நிறை மனிதனாக வாழவேண்டும் என்று அறநூல்கள் வலியுறுத்துகின்றன. பூரண மனிதன் யார்? பூரண மனிதன் என்பவன் தன்னை உணர்ந்து வாழ்பவன் என ஆன்மீக வாதிகள் பொருள் கொள்வர். உள்ளம் ஆரோக்கியமாக உள்ளவனே பூரண மனிதன் என மெய்ஞ்ஞானம் கூறும். ஆனால், விஞ்ஞானமோ, உடல் ஆரோக்கிய மானவனையே பூரண மனிதன் எனக் கூறுகின்றது. "மனிதனாகப் பிறந்திருக்கிறவனிடத்து, மனித நேயத் தன்மையெல்லாம் பொருந்தியிருக்க வேண்டும்; மனிதன் என்று தன்னை உணர்கின்றானோ அன்றே அவன் மனிதன் ஆகின்றான்" என்கின்றார் சுவாமி இராமகிருஷ்ணர்.

கல்வி மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதது. அது, மனிதனின் கண் என்றுஞ் சொல்லப்படுகின்றது. எனினும் கல்வி கற்றவர்கள் எல்லோரும் பூரண மனிதர்களாகிவிடுவதில்லை. கற்றவன், கற்றபடி நிற்கும்போதே பூரண மனிதன் ஆகின்றான். கல்வி, உண்மையை – பேருண்மையை விளக்குவது. அந்த உண்மைப் பொருளை, மெய்ப்பொருளை உணர்ந்து அதற்கேற்ப ஒழுகுபவனே பூரண மனிதன். படித்தவர்களால் அல்லாமல், பண்புடையவர்களாலேயே உலகம் வாழ்கின்றது என ஆன்றோர் விளக்கியுள்ளனர்.

உடலமைப்பின் அடிப்படையில் மனிதன், எல்லோரையும் வகுத்துப் பார்க்கின்றான்; குள்ள மனிதன், நெடியமனிதன், நொண்டி என்றெல்லாம் வகைப்படுத்துகின்றான். ஆனால் ஒருவனுடைய உள்ளம் தூய்மையானதாக, நிறைவானதாக இருந்தால், உடலின் குறைபாடுகள் பெரிதுபடுத்தப்படுவ தில்லை. காந்தியின் உடல் அமைப்பைப் பற்றி யாரும் சிந்திப்பதில்லை. அவருடைய உள்ளம்பூரணமானதாக இருந்ததால் அவரை மஹாத்மாவாக உலகம் போற்றியது; போற்றுகின்றது. உடலின் பொலிவைவிட, உள்ளத்தின் பக்குவமே முக்கியமானது.

பூரண மனிதன் பொறுமையுடையவன்; அவன் யாரையும் பகைப்பதில்லை; தன்னுடன் பகைத்தவனையும் அவன் பண்புடன் நடத்துவான். பூரண மனிதன், மன்னிக்கும் சுபாவமுடையவன். பிறர் தீங்கினால், தான் வருந்தினாலும், அவர்கள் செய்த தீங்குக்குப் பதிலாகத் தான் தீங்கு செய்வது தர்மம் அல்ல எனச் சிந்தித்து அதன்படி நடப்பவன் அவன்.

பெரிய புராணத்தின் மெய்ப்பொருள் என்ற சேதியில் நாட்டு மன்னனின் வரலாறு கூறப்படுகின்றது. அவர் சிவனடியார்களைப் பெரிதும் மதிப்பவர். சிவப்பொலிவுக்குரிய சிவ சின்னங்களை உயிராகப் போற்றுபவர். அவரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரியாகிய முத்தநாதன் என்பவன் சிவப்பொலிபோடு ஒருநாள் அவருடைய அரண்மனைக்குட் புகுந்தான். வந்தவன் தன் எதிரி என்பதை அறியாமல் சிவனடியாராகவே கருதி அவனுக்குப் பணிவிடை செய்தார் மெய்ப்பொருள். அவ்வேளையில் சரியான ஒரு சந்தர்ப்பத்தில் மெய்ப் பொருளைத் தன் வாளாலே குத்தினான் முத்தநாதன்.மெய்ப்பொருளின் மெய்க்காவலன் ஒருவன் ஓடிவந்து, முத்தநாதனை அடையாளங்கண்டு அவனைக் கொல்ல முயன்றான். தன் உயிர் போகும் வேளையிலும், "சிவப்பொலிவோடு வந்தவனைக் கொல்லாதீர்" எனத் தடுத்து நிறுத்தினார் மெய்ப்பொருள். இங்கு மெய்ப்பொருளின் உயர் பண்பு தளர்விலா உள்ளம் நன்கு தெரிகின்றது.

எதிரியாகிய இராவணன், நிராயுதபாணியாக நாணி நின்ற வேளையில், "இன்று போய், போர்க்கு நாளை வா" எனக் கூறும் இராமனின் நிறைமொழி அவருடைய தளர்விலாத் தன்மையை விளக்குகின்றது.

துன்பத்திலும் இன்பத்திலும் தன் உள்ளப் பக்குவத்தைத் தொலைத்துவிடாது காத்தவர் இராமபிரான். ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் உடைமையும் வறுமையும் மாறி மாறி வருவது இயல்பு. அதற்கு இராமபிரானும் விதிவிலக்காக இருக்கவில்லை. தான் பட்டாபிஷேகம் செய்து கொண்டு இன்புற்று வாழும் எண்ணத்துடன் முதல் நாளிரவு பஞ்சணையில் நித்திரை கொண்ட இராமபிரான், மறுநாட் காலை அயோத்தியைவிட்டு விலகி மரபுரி தரிசித்த கோலத்தில் சருகுகளைப் பரப்பி மரத்தடியில் படுத்து உறங்கினார். தமையனின் பரிதாபநிலை கண்டு கவலையுற்றான் தம்பி இலக்குமணன். வாழ்க்கையில் ஏற்பட்ட திடீர் மாற்றத்தை எண்ணிக் கலங்காமல் நிம்மதியாக நித்திரை கொள்ளும் அண்ணனின் பேரியல்பைக் கண்டு வியப்புற்றான். தனக்குத் திடீரென்று வாய்த்த வறுமை வாழ்க்கையை இராமன் வறுமையாக மனத்தில் வாங்கிக் கொள்ளவில்லை. வளம், வறுமை என்பவையெல்லாம் மன நிலையைப் பொறுத்தவை. செல்வம் என்பது சிந்தனையின் நிறைவே, நிறைந்த மனமுடைய இராமபிரானின் வாழ்வு மனிதனுக்கு எடுத்துக்காட்டாகும்.

பலருடைய வாழ்வு பூரணமடைவதில்லை. காரணம், அவர்களுடைய உள்ளத்தில் எவ்வேளையிலும் அவா என்னும் பேரலை மோதிக்கொள்வதே. தன்னிடம் இருப்பவை போதாது என நினைப்பதும், பொருளை நாடி அலைவதும், பிறரின் செல்வ, சௌகரியங்களைக் கண்டு பொறாமைப் படுவதும் அவாவின் வெளிப்பாடே. மனிதனை இழிநிலைக்குத் தள்ளும் அவாவை நாம் அறுக்க வேண்டும். ஒரு போதும் நிரம்பாத தன்மையுடைய அவாவை ஒழித்தால், ஒழிந்த அந்நிலையே எப்போதும் மாறாதிருக்கும் இன்ப வாழ்வைத் தரும் என்ற கருத்தில்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆரா இயற்கை அவா நீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்"

எனத் திருவள்ளுவர் கூறுவதை நாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். "போதும் என்ற மனமே பொன் செயும் மருந்து" என்பதும் நாம் அனைவரும் அறிந்த பொன்மொழியே!

நமது இந்து சமயம், பூரண மனிதர்களைக் காலத்துக்குக் காலம் எம்மிடையே தோற்றுவித்துள்ளது. நாயன்மார்கள், இராமகிருஷ்ணர், விவேகானந்தர் போன்றோர் பூரண மனிதர்களே. மானிட மேன்மையைத் தம் வாழ்வினூடாக வெளிப்படுத்தியவர்கள் அவர்கள். அவர்களுடைய உடல் மறைந்தாலும் அவர்களுடைய நிறைவான உள்ளம் இன்னும் வாழ்ந்து பலருக்கு வழிகாட்டிக் கொண்டிருக்கின்றது.

மனிதன், தன்னைப் பூரண மனிதனாக வளப்படுத்திக்கொள்ள, இறை நம்பிக்கை பெரிதும் துணை செய்யும். கடவுள் எம்மைக் கடந்தவராக உள்ளார்; எப்பொழுதும் எம் காரியங்களை அவதானிக்கும் சக்தியே இறைவன். இந்த உண்மைகளைத் தெளிவாக உணர்ந்து, இறைவனை நினைந்து பூரண மனிதர்களாக வாழ ஒவ்வொருவரும் முயலவேண்டும்.

## காந்தி ஐயா

அன்புடனே கைகூப்பி
ஆனந்தம் என்று பிறர்
துன்பம் துடைப்பதற்குத் துடியாய்த்
துடித்தென்றும்
பண்போடும் பணிவோடும் பரிவோடும்
பணிபுரிந்து
இன்ப முறும் கர்மயோகி
இனி நாம் எங்கு காண்போம்.

(ஆர். வி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தானங்களில் சிறந்தது அன்னதானம்

தானங்கள் எல்லாவற்றுள்ளும் சிறந்த அன்னதானத்தைச் சைவப் பெருமக்கள் என்றுமே பேணிப்போற்றி வருகின்றனர். எங்கும் நிறைந்துள்ள இறைவனை எவ்வுயிரிலும் கண்டு வணங்குவது சைவசமயத்தவரின் உயர் தத்துவ மரபாகும். சைவநாயன்மார்கள், தம்மை நாடி வந்த சிவனடியார்களைச் சிவபெருமானாகவே பாவித்து வணங்கிப் பணிவிடை செய்தனர். ஆண்டவனுக்கு அர்ப்பணிக்கும் அத்தனையையும் ஆண்டவனின் அடியவர்க்கும் அர்ப்பணிக்கும் மரபு தொன்றுதொட்டே இருந்து வருகின்றது. சிவனுக்கு நிவேதித்துப் பூசை செய்வது எவ்வளவு உயர்வானதோ, அவ்வளவு உயர்வானது, அடியவர்களின் பசியை ஆற்றும் பணி. கல் வைத்த இடமெல்லாம் கருணையோடு கும்பிடுகின்ற பக்தர்கள் அத்தெய்வத்துக்குப் பொங்கிப் படையலிட்டு, "நாம் உண்டு வாழ உறுதுணை செய்யும் பரம்பொருளே! உன் பெயரால் உன் அடியவர்களுக்கும் ஏழைகளுக்கும் உணவு கொடுக்கின்றோம்" என வணங்கி, உணவூட்டி மகிழ்ந்து திருப்தியடைவர்.

சைவசமயத்தவரின் வழிபாட்டுத் தலங்கள் தோறும், வயிற்றுக்குச் சோறிடுகின்ற அன்னப்பணி ஆலயப்பணிகளுட் பிரதான இடத்தை வகிக்கின்றது. "அன்னம்பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்" எனச் சிதம்பரத் திருத்தலத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றார் திருநாவுக்கரசர். தமிழ்நாட்டிலுள்ள பெரும்பாலான சிவாலயங்களில் அன்னாபிஷேகமும் அன்னதானமும் குறைவின்றி நடைபெற்று வந்துள்ளன. காலப்போக்கில் அன்னதானப் பணிகள் விரிவடைய, திருமடங்கள் தோன்றின; முப்போதும் பசி தீர்க்கும் முதன்மை நிலையங்களாக இவை விளங்கின. ஊருக்கு ஊர் சத்திரங்கள் அமைக்கப்பட்டு, வழிப்போக்கர்களின் வயிறு குளிர உணவு வழங்கப்பட்டது.

பஞ்சத்தாலும் பட்டினியாலும் வருந்திய மக்களுக்கு, அநுபூதிச் செல்வர்களாகிய நாயன்மார்கள் பலர், பரம்பொருளிடம் மன்றாடிப் பணமும் பண்டமும் பெற்றுப் பசிப்பிணி தீர்த்த வரலாற்றைச் சைவ உலகம் நன்கறியும். ஐந்தாங் குரவராகிய நமது நாவலர் பெருமான் ஆற்றிய "கஞ்சித் தொட்டித் தர்மத்தை" அறியாதார் யார்?

இல்லற தர்மத்தில் வாழும் ஒவ்வொருவரினதும் இனிய கடமைகளுள் விருந்தோம்பல் முதன்மையாகக் கருதப்படுகின்றது. வீட்டில் இருந்து, பொருள்களைக் காத்து இல்வாழ்க்கை நடத்துவதன் நோக்கமே, விருந்தினரை வரவேற்று அவர்களுக்கு உணவூட்டி உபசரிப்பதுதான் என்பதை,

"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற குறளிலே விளக்குகின்றார் திருவள்ளுவப் பெருமான்.

வீட்டிற்கு வரும் விருந்தினரை வரவேற்று உணவூட்டி உபசரித்து அனுப்பி அடுத்த விருந்தினர் எப்போது வருவர் எனக் காத்திருப்பவன், விண்ணுலகிலுள்ள தேவர்களுக்கு நல்ல விருந்தினராக ஆவான்.

"செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு"

என்பார் திருவள்ளுவர்.

"துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை"

எனத் திருவள்ளுவர் கூறுவதும் கவனிக்கத்தக்கது.

சைவ சமயத்தவர்களாகிய நாம் சைவ நீதிகளை நன்கு பேண வேண்டும். அந்த நீதிகளைப் பேணத் தவறுவோர் தீவினை செய்பவர்களாவர். நாம் உணவு உண்ணும் ஒவ்வொரு வேளையிலும் அவ்வுணவைத் தந்த இறைவனுக்கு நன்றி கூறுவேண்டும். அந்த நன்றியை நல்வினை ஊடாகப் பெருக்க வேண்டும். பசியால் வாடுபவர்களைத் தேடி அவர்களின் பசியை ஆற்றுவது சிறந்த நல்வினையாகும்.

மனிதனைத் திருப்திப்படுத்துபவற்றுள், பசியை ஆற்றுவதைப் போன்ற நற்பணி வேறொன்றுமில்லை. எம்மை நாடி வருகின்ற ஏழைக்குப் பண உதவி செய்தால், அவன் "போதும்" என்று சொல்லமாட்டான். உண்ண உணவைக் கொடுத்தால், உண்ட பின் மீண்டும் உணவைப் பரிமாறினால், ஓர் எல்லையில் "போதும் போதும்" என்று அவனுடைய வயிறு சொல்லும். ஆகவேதான் அன்னமிடும் பணியால், சில சமயம் வாய் வாழ்த்தாவிட்டாலும், வயிறு வாழ்த்தும் என எம்முன்னோர் கூறி வைத்துள்ளனர்.

எம் மூதாதையர் பலர், ஆண்டவன் பெயரால் அடியார்களுக்கு அன்னதானம் செய்வதே வாழ்வு எனக் கருதினர். "தேடிய மாடு வீடு செல்வம் தில்லை மன்றுள் ஆடிய பெருமான் அன்பர்க்கே ஆவன ஆகும்" எனச் சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்திலே குறிப்பிடுகின்றார்.


எமது இத் தாய்த்திருநாட்டில் செல்வச்சந்நிதி ஆலயம், தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயம், நயினை நாகபூஷணி அம்மன் ஆலயம், வல்லிபுர ஆழ்வார் கோயில் போன்ற ஆலயங்களில் அன்னதானப்பணி தொடர்ந்து நடைபெறுகின்றது. சைவக்கோயில்கள் எல்லாவற்றிலும் இப்பெரும்பணி பரவவேண்டும். நாட்டில் நல்லவை நடப்பதற்கு, நாம் நல்லறங்களைச் செய்தல் வேண்டும். ஆலயங்களில், கட்டடப் பணியோடு கருணைப் பணியையும் செய்ய முற்படுவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# திருவருள்மிகு பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவருள்மிகு பன்னாலை
## வரத்தலம் கற்பக விநாயகர் திருக்கோவில்



## இரதோற்சவ தினத்தன்று விநாயகப்பெருமான்
## தேரில் எழுந்தருள வருதல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான்

மனிதப்பிறவி மகத்தான பிறவி எனப் பெரியோர்கள் சொல்வதை அடிக்கடி நாம் கேட்டுவருகின்றோம். ஆனால், அவர்கள் சொல்வது சரியா? பொருத்தமானதா? ஏன் அப்படிச் சொல்கின்றார்கள்? எனச் சிந்திப்பதற்கு நாம் தவறிவிடுகின்றோம்.

மனிதனைப்போல், பறவைகள், விலங்குகளும் இவ்வுலகிலே பிறக்கின்றன. ஆனால், கவலை கஷ்டம் என்பவை அவைகளிடம் இல்லவே இல்லை. விரும்பியவற்றை உண்டு, விரும்பிய இடங்களில் வாழ்ந்து ஆடிப்பாடி மகிழ்கின்றன.

மனிதனுக்குத்தான் எத்தனை கவலைகள், கஷ்டங்கள், நோய்கள் போட்டி பொறாமைகள்! இந்த மனித வாழ்க்கையைப் போய் மகத்தான வாழ்க்கை என்கிறார்களே!

மகத்துவம் என்பதுதான் என்ன? மனிதப் பிறவியை எடுத்தாலே போதும். அந்த மகத்துவம் வந்துவிடுமா?

மிருகங்கள் பலவற்றின் உறுப்புக்கள் பல, அந்த மிருகங்கள் இறந்த பின்னருங்கூட மனிதனுக்குப் பயன்படுகின்றன. மானின் தோல் இருக்கை ஆகின்றது; மாட்டின் தோல் மத்தளம் ஆகின்றது. உடுக்குச் செய்வதற்கு உடும்பின் தோல் பயன்படுகின்றது. யானைத் தந்தத்தால் அழகுப் பொருள்கள் செய்யப்படுகின்றன. சில மிருகங்களின் உடல், மனிதனின் உணவாக ஆகின்றது.

ஆறறிவுடைய மனிதனின் அங்கங்கள் இப்படிப் பயன்படுகின்றனவா? கண், சிறுநீரகம் போன்றவற்றைப் பயன்படுத்தலாம் தான். ஆனால் உயிருடன் இருக்கும்போதே அதற்கான அனுமதியை எழுத்துமூலம் தெரிவித்திருக்காவிட்டால், அவற்றை யாரும் பயன்படுத்தவே முடியாது.

இறந்த பின்னரும் மனிதர்களுக்கு உதவும் பறவைகள், விலங்குகளை, மகத்தானவை எனச் சொல்லாமல், மனிதப் பிறவியை ஏன் மகத்தான பிறவி என்று சொல்கின்றார்கள்.

இறைவனை நினைக்கின்ற சந்தர்ப்பம், இறைவனை வணங்குகின்ற சந்தர்ப்பம், அவற்றால் மற்றவர்களுக்கு உதவி செய்கின்ற சந்தர்ப்பம் மனிதப் பிறவியிலே தான் அதிக அளவிலே கிடைக்கின்றது என்பதுதான் காரணம். அதனால் பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட காலத்தில் ஒருவன் என்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்திக்கின்றான்? எவ்வாறு நடந்து கொள்கின்றான்? என்பவை முக்கியத்துவம் பெறுகின்றன.

இறந்த பின்னர் உதவாத மனிதன், இருக்கும்போதாவது உதவக்கூடாதா? இந்த வகையிலே நாம் சிந்திப்போமானால், நாம் மகத்தானவர்களாக ஆகலாம். இடையிலே எத்தனையோ இடையூறுகள், நெருக்கங்கள், தடைகள், பிரச்சினைகள் ஏற்படலாம். அவற்றைத் தாண்ட வேண்டும்.

இதற்குத் திடசித்தம் என்ற மன உறுதி மட்டும் இருந்தாற்போதாது, தெய்வ சித்தமும் வேண்டும். உலகமுய்ய உயர்ந்த கருத்துக்களை, பக்திச் சுவை நனிசொட்டச் சொட்டக் கூறுவது திருவாசகம். சைவ சமய நூல்களுள் உன்னதமான ஒரிடம் அதற்குண்டு. இதனைப் பாடிய மணிவாசகர், "போற்றித் திருவகவல்" என்ற பகுதியில், தெய் சித்தம் மனிதனை எங்கெல்லாம் காக்கும் என்பதை மிகவும் அழகாகக் கூறுகின்றார்.

பித்த வுலகர் பெருந்துறைப் பரப்பினுள்
மத்தக் களிறெனும் அவாவிடைப் பிழைத்தும்
கல்வி என்னும் பல் கடல் பிழைத்தும்
செல்வம் என்னும் அல்லலிற் பிழைத்தும்
நல்குரவு என்னும் தொல்லிடம் பிழைத்தும்
தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி...

அவா, கல்வி, செல்வம், வறுமை, உணர்ச்சிவசப்படுதல் போன்ற வற்றிலிருந்து மனிதன் தப்பிப் பிழைக்க வேண்டும்.

மனிதனிடமுள்ள அவாவை மத யானை என்கின்றார் மணிவாசகர். யானைக்கு மதம் பிடித்தால் அது என்ன செய்யும் என்பதை விளக்கத் தேவையில்லை. மனிதனிடம் அவா புகுந்து கொண்டால், அந்த மதயானையைப் போன்றே அவன் தறிகெட்டுத் திரிவான். ஆனால், கடவுள் சித்தம் உடையவனை அவா அணுகவே மாட்டாது. "பித்தவுலகர் பெருந்துறைப் பரப்பினுள் மத்தக்களிறெனும் அவாவிடைப்" பிழைப்பதற்குத் தெய்வ சித்தமே ஒரே வழி.

அவாவினால் அழிவுண்டாகும் என்பதை ஏற்றுக்கொள்ளலாம். கல்வியாலும் அழிவுண்டாகுமா? கல்வியை மனிதனின் கண் என்கின்றார்கள் எண் இல்லாமல் வாழ முடியுமா? எனச் சிலர் கேட்கலாம்.

"கல்வி என்னும் பல் கடல் பிழைத்தும்" என மணிவாசகர் கூறுவதில் உயர்ந்த கருத்துண்டு. கல்வி, மனிதனுக்கு அறிவைக் கொடுக்கின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது உண்மைதான். ஆனால் அவாவுடைய மனிதன், அந்த அறிவைத் தன் சுயநலத்திற்காக, மற்றவர்களை அழிப்பதற்காகப் பயன்படுத்துவதையே நாம் இவ்வுலகிலே காண்கின்றோம். போட்டி, பொறாமை, வஞ்சகம், சூழ்ச்சி, ஊழல் போன்றவை கற்றவர்களிடம் தான் அதிக அளவில் இருக்கின்றன. ஆனால், கற்ற அறிவைப் பயன்படுத்தி அவர்கள் அவற்றை மறைக்க முயல்கின்றார்கள். நெஞ்சிலே நஞ்சை வைத்துக்கொண்டு, நாக்கிலே தேனைச் சொட்டச் செய்ய அவர்களால் முடிகின்றது. ஆனால் கடவுள் பக்தியுடைய கற்றவன் இப்படி நடக்க மாட்டான். பக்தி இல்லாத கல்வியால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களிலிருந்து விடுபடுவதற்குக் கடவுளின் அருளே முக்கியமானது என்பதை வலியுறுத்துகின்றார் மணிவாசகர். கல்வி யறிவற்றவன் குற்றம் செய்தால், அவனுக்கு மன்னிப்புண்டு. ஆனால், கற்றவன் குற்றம்செய்தால் அவனுக்கு மன்னிப்பு வழங்கத் தர்மத்தில் இடமில்லை.

கல்வியைப் போன்று, செல்வமும் ஆபத்து நிறைந்ததே. பொன், பொருளாகிய செல்வம் நிறைய இருந்துவிட்டால், நிம்மதியாக வாழ்ந்துவிடலாம் என மனித உலகம் கற்பனை பண்ணுகின்றது. ஆனால், அளவிற்கு மிஞ்சிய செல்வம் ஆபத்தானதும் நிம்மதியைக் குறைப்பதுமாகும். செல்வம் அளவுடனேயே இருக்க வேண்டும். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்பது ஆழமான அர்த்தமுடையது. செல்வத்தின் விரிவு செருக்கை உண்டாக்கும். செருக்கினால் வரும் அகந்தை அழிவுக்கு அடிப்படையாகிவிடும்.

மிகுந்த செல்வம் இருக்கின்றது என்பதற்காக, ஒருவனால், ஓர் எல்லையை மீறி உண்ண முடியுமா? பணம் தாராளமாக இருக்கின்ற தென்பதற்காக எமது பாதணிகளைப் பெரிதாகப் போடுவோமேயானால் நடக்கமுடியாது தடக்கி விழுவோம். இந்த நிலைகளை நாம் தாண்ட வேண்டுமானால் செல்வத்தையும் நல்வழியில் அனுபவிக்க வேண்டு மானால், தெய்வ சித்தமே எமக்குத் துணையாய் அமையவேண்டும்.

செல்வம், அல்லல்கள் பலவற்றை அள்ளித்தரும் எனக் குறிப்பிடும் மணிவாசகர் செல்வத்திற்கு எதிர்மறையான வறுமையும் (நல்குரவு) அத்தகையதே என்பதைக் கூறுவதற்குத் தவறவில்லை. "நல்குரவு எனும் தொல்விடம் பிழைத்தும்" என்கிறார் அவர். வறுமையுற்ற காலத்தில் மனிதனிடம் தெய்வ சித்தம் இல்லாவிட்டால் வறுமையின் கொடுமையிலிருந்து தன்னைக் காத்துக்கொள்ள அவன் தர்ம வரம்பை மீறிவிடுவான்; அவன் திருடுவான்; கொலை செய்வான்; வாங்கிய கடனைத் திரும்பிக் கொடுக்க மாட்டான். தெய்வ சித்தமே இத்தகைய தீமை களிலிருந்து அவனைக் காப்பாற்றக்கூடிய சக்தி படைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபம், பொறாமை, வெறுப்பு, பகைமை போன்ற உணர்ச்சிகளுக்கு அடிக்கடி அடிமையாகும் மனிதன், செய்யக்கூடிய தீங்குகளுக்குக் கணக்கேயில்லை. உணர்ச்சி வசப்படுபவன், தன்னையும் அழித்து, மற்றவர்களையும் அழிக்கின்றான். மனிதனிடம் இறை சிந்தனை நிறைந்திருந்தால், உணர்ச்சிவசப்படுவதால் ஏற்படக்கூடிய அழிவுகளைத் தடுத்து நிறுத்தி விடலாம்.

தெய்வசித்தம் அவாவை நீக்குகின்றது" கல்வி, செல்வம், வறுமை ஆகியவற்றால் ஏற்படுகின்ற தீமைகளைப் போக்குகின்றது; தீய உணர்ச்சிகளுக்கு ஆளாகாமல் மனிதனைக் காக்கின்றது. தெய்வத்தைப் பற்றிச் சிந்திக்கின்ற, தெய்வத்தை உணர்கின்ற மனிதன், ஒரு போதும் பிறர்க்குத் தீமை செய்ய நினைக்கமாட்டான். மாறாக, எல்லோர்க்கும் எவ்வேளையிலும் நன்மை செய்யவேண்டும் என்றே எண்ணுவான். நல்ல எண்ணங்களை எண்ணும் மனிதன் செய்யும் செயல்கள் என்றும் நல்லவையாகவே அமையும்; அல்லற்பட்டு ஆறாது அழுபவர்களின் கண்ணீரைத் துடைப்பான்; அநாதைகளை, அகதிகளை ஆதரிப்பான்; பசியால் வாடுபவர்களுக்கு, பல்வகை நோய்களால் வருந்துபவர்களுக்கு உதவுவான். தேவை ஏற்படும்போது தன்னுடைய உயிரைக் கூட மற்றவர்களுக்காகத் தியாகஞ் செய்யத் தயங்கமாட்டான்.

இப்படி மற்றவர்களுக்காக வாழும் வாழ்க்கைதான் மகத்தான வாழ்க்கை. இத்தகைய வாழ்க்கையை வாழ்வதற்குத் தூண்டுவது தெய் சித்தமே.

எல்லோரும் இன்புற்று வாழவேண்டும் என்ற உயர்ந்த சிந்தையுடன், மற்றையோர்க்கு உதவிகளைச் செய்பவனைத் தான் "வாழ்கின்றனவாகக்" கொள்ளல் வேண்டும். அப்படிச் செய்யாதோர், இருந்தும் இறந்தவர்களே.

"ஒத்த தறிவான் உயிர் வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்"

என்ற வள்ளுவரின் வாக்கையும் நினைவிருத்தி, இறைவனை வழுத்தி, மானிடராகப் பிறந்ததன் பயனை முழுமையாகப் பெறுவோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறுவது சினம்

இந்துக்கள் வகுத்த நல்லறங்கள் மனித வாழ்க்கையை உயர்த்துவன; பண்படுத்துவன; மனிதர்களைப் புனிதர்களாக ஆக்குவன; வாழ்க்கையில் அமைதியும் ஆனந்தமும் நின்று நிலவுவதற்கு வழிவகுப்பன.

கோபத்தால் அறிவு மயங்கும், தீய சொல்லும் தீய செயலும் தோன்றும் - பிறர் வருந்துவார்கள், பகையும் பாவமும் எம்மை அச்சுறுத்தும், வேற்றுமை வளரும். வேற்றுமைகளை வளர்ப்பவன் நரகத்தை சிருஷ்டி பண்ணுகிறான் என்பது ஒரு ஆன்மீகப் பெரியவரின் அமுதவாக்கு.

ஔவை மூதாட்டியின் அறக்கருத்துக்கள் பல, இந்துக்களுடன் மட்டுமல்லாமல் எல்லா மக்களுக்கும் எக்காலத்துக்கும் ஏற்றவையாக இருக்கின்றன. அவற்றுள் ஒன்று "ஆறுவது சினம்" என்பது. இந்த இரண்டு அருமையான சொற்களால் அகில உலகிலும் அமைதியையும் இன்பத்தையும் காண விழைகின்றார் அவர்.

உலகின் அமைதியின்மைக்கு அடிப்படைக் காரணம், மனிதகுலம் சினத்தை அடக்காது அதனைப் பெருக்குவதே. சினத்தின் விளைவு பொல்லாதது. சிரித்து மகிழ்ந்து வாழவேண்டிய மனிதர்கள், சினத்தால் மற்றையோரைப் பகைத்துச் சீரழிக்கின்றார்கள். கோபத்தை வளர்ப்போர் தாமும் வெந்து, மற்றையோரையும் வேக வைக்கின்றார்கள்.

பலருடைய உள, உடற் பிணிகளுக்குக் காரணம் கோபம் என்கின்றது விஞ்ஞானம். மேன்மை மிக்க வாழ்வைச் சொன்ன மெய்ஞ்ஞானம், இம்மைக்கும் மறுமைக்கும் நன்மை கிடைக்கவேண்டுமெனில் மனிதன் சினத்தை அடக்கவேண்டும் என என்றோ செப்பியுள்ளது.

கோபத்தால் அறிவு மயங்கும், கோபத்தோடு எழுபவன் பாவத்தோடு இருக்கிறான் என்பது பகவத்கீதை கூறும் மகா வாக்கியமாகும். கோபத்தை வளர்த்து அதனால் அழிந்து போனவர்களை அறக்காப்பியங்களாகிய இதிகாச புராணங்கள் எமக்கு நினைவூட்டுகின்றன. ஆனந்தமாக வாழ்ந்திருக்கக்கூடிய இராவணன் அவலமாக அழிந்தொழிந்ததற்குக் காரணம் அவனிடமிருந்த போகமும் காமமுமே. தான் பெற்ற இறையருளால் அறவாழ்வு வாழாமல், அறத்தையே அழிக்க முனைந்தான்; தன் கோபத்தையும் காமத்தையும் வளர்த்துக் கொண்டான். அகந்தைக்கு ஆளானான். தன்னுடைய தீய நோக்கங்களை அடைவதற்கு இறையருளையே கருவியாக்கவும் முனைந்தான். இறுதியில் அழிவு தவிர்க்க முடியாததாகிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாபாரதத்திலே கௌரவர்களின் கதை முடிந்ததற்குரிய அடிப்படைக்காரணம் துரியோதனனிடம் இருந்த கோபமும் அவாவுமே.

முற்றுமுணர்ந்த முனிவர்கள்கூட, கோபத்தாற் சாபங்களை விதைப்பதும் சாபங்களினால் பாவங்களை அனுபவிப்பதும் புராண இதிகாசங்கள் தரும் செய்தியாகும். அன்பு வளர்வதற்குப் பதிலாக, கோபம் வளர்ந்துள்ளதனால், உலகில் இன்று அணுகுண்டுகள் வளர்ந்துள்ளன; ஒரு நொடியில் மனிதகுலம் முழுவதையுமே நாசமாக்கப்போவதாகப் பயமுறுத்திக் கொண்டிருக்கின்றன. கோபத்தினாற் பிரசவிக்கப்பட்ட அணுகுண்டுகள் இதுவரை எத்தனை கோடி மக்களின் உயிரைக் குடித்துவிட்டன! பொன் கொழிக்கும் எத்தனை நாடுகள் புல்லே முளையாத பாலைவனங்களாக மாறிவிட்டன. இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் மனிதமனத்தை ஆக்கிரமித்துக்கொண்டிருக்கும் கோபம் அல்லாமல் வேறென்ன?

ஒரே வீட்டில், ஒரே இடத்தில் இருந்து ஒரே உணவைப் பகிர்ந்துண்டு, ஒன்றாய் உறவாடும் உடன்பிறந்த சகோதரர்கள் கூட, அற்ப காரணங்களால் எழும் கோபத்தினால் பிரிந்துவாழும் நிலையைக் காண்கின்றோம். இறைவன் அருளால் வாழக்கிடைத்த இனிய நாட்களை, வருத்தமும் மனக்கசப்புமின்றி வாழமுடியாதா?

சினத்தை அடக்காவிட்டால் வீட்டுக்கும் துன்பம், நாட்டுக்கும் துன்பம். பாம்பின் நச்சுப் பல்லைப்பிடுங்கிவிட்டால், அதனோடு வாழலாம். அதேபோல், மனிதனிடமிருந்து சினத்தை அகற்றினால் மட்டுமே அவனுடன் வாழலாம்.

குண்டூசியைப் பாடவைத்துவிட்டான்; சந்திரமண்டலத்துக்குச் சென்று சாதனை படைத்துவிட்டான் என்று சொல்வதில் என்ன பயன்? கோபத்தை வளர்க்கக்கூடிய சந்தர்ப்பங்கள் பலவற்றை உருவாக்குவதிலுமல்லவா அவன் வேகமாக இருக்கின்றான்!

பொறுமையைக் கடைப்பிடித்துக் கோபத்தை அடக்கவேண்டும்; அதைவிரட்ட வேண்டும். அந்தக் கோபமே எம்மைக் கொன்றுவிடும் என எச்சரிக்கை செய்கிறார் திருவள்ளுவர்.

தன்னைத்தான் காகிற் சினங்காக்க, காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்
என்கிறார் அவர்.

உலகத்தைச் சுற்றிவர முன், வேறு மண்டலங்களுக்குப் போவதற்கு முயற்சி செய்ய முன், எம்மை நாமே சுத்தம் செய்யவேண்டும். எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனத்திலுள்ள கோபத்தை அகற்றுவதே மிகப்பெரிய மிக அடிப்படையான சுத்தமாகும்.

சினம் ஒழிந்து, உலகம் செம்மையுறுவதற்கு ஆன்மீகமே ஒரே வழி. கோபத்தினால் நல்ல மனிதர்களை நல்ல நண்பர்களை இழக்காமல் இருப்பதற்கு, அமைதியும் ஆனந்தமும் நிறைந்த வாழ்க்கையை வாழ்வதற்கு இறைவனையே நாம் சரணடைய வேண்டும். இறைவனின் தண்ணளியே கோபத்தின் வெம்மையைத் தணிக்கவல்லது.

"வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க" எனத் தன்னிடமிருந்த கோபத்தை அடக்கிய இறைவனுக்கு நன்றி செலுத்துகின்றார் மாணிக்கவாசகப் பெருந்தகை. ஆன்மீக நெறியில் நனைந்தவன் சினத்தை அடக்குகின்ற சிறுமை செய்யும் மனிதர்களை மன்னிக்கின்ற பக்குவத்தைப் பெறுகின்றான்.

இனிய வாழ்வியற் சிந்தனைகளைத் தந்த தவஞானியாகிய திருமூலர், ஒவ்வொரு மனிதனும் பொறுமையைக் கடைப்பிடித்துத் தன்னைப் பக்குவப்படுத்திக்கொள்ள வேண்டும் என்கிறார்; எல்லா ஆற்றல்களையும் எல்லாச் சக்திகளையும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்கின்றார்.

வல்வகையாலும் மனையிலும் மன்றிலும்
பல்வகை யாலும் பயிற்றிப் பதம் செய்யும்
கொல்லையில் நின்று குதிகொள்ளும் கூத்தனுக்கு
எல்லை இல்லாத இலயம் உண்டாமே

என்பது திருமூலர் வாக்கு.


இத்தகைய உயர்ந்த சிந்தனைகளைத் தூண்டி மக்களை நன்னெறியில் இட்டுச் செல்லும் ஆற்றல் வாய்ந்தது ஔவையாரின் அந்த அமுதமொழி "ஆறுவது சினம்".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவுஸ்ரேலியா சிட்னி
அபயகரம் K. சிவானந்தன் அவர்கட்கு
(பரிஸ்டர்)

# இதய அஞ்சலி



**அவுஸ்ரேலியா சிட்னி மாநகரில் "அபயகரம்"**
**என்னும் பெயரில் அறப்பணி அமைப்பை**
**உருவாக்கி கடந்த 26 ஆண்டுகளாக எமது**
**துர்க்காபுரம் மகளிர் இல்ல வளர்ச்சிக்கு**
**அருந்தொண்டாற்றிய இப் பெருந்தகையின்**
**பிரிவு குறித்து கவலையடைகிறோம்.**
**அன்னாரின் ஆத்மா சாந்தி பெறத்**
**துர்க்காதேவியைப்**
**பிரார்த்திக்கிறோம்.**

**நிர்வாக சபை**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை.**

**துர்க்காபுரம் மகளிர் இல்லம்,**
**தெல்லிப்பழை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் ஒளி தகவல் களஞ்சியம்

### சிவத்திரு. ந. சச்சிதானந்தனின் பவளவிழா

லண்டன் மாநகரில் கடந்த 50 ஆண்டுகளாக சமய சமூகப் பணிகளை ஆற்றிவரும் திரு. நடராஜா சச்சிதானந்தன் அவர்களின் அகவை 75 பூர்த்தி விழா லண்டனில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. லண்டன் திருக்கோவில் ஒன்றியத்தின் ஸ்தாபகராகிய இவர் லண்டனில் அனைத்துலக சைவ மகாநாடுகளை முன்னின்று நடாத்தியவர்.

### கைதடி இந்து வாலிபர் சங்கத்தின் வைரவிழா

கைதடியில் அன்னலட்சுமி பதிப்பக அதிபர் திரு. கந்தையா அவர்களின் பெருமுயற்சியால் 1958இல் உருவாக்கப்பட்ட கைதடி கிழக்கு இந்து வாலிபர் சங்க வைரவிழா 28, 29 திகதிகளில் இம்மாதம் கைதடியில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. விழாவை முன்னிட்டு சிறப்பு ஆவண மலர் வெளியிடப்பட்டது.

### கண்ணகி கலை இலக்கிய விழா

மட்டக்களப்பு கழுதாவளையில் செப்ரெம்பர் 7, 8, 9 திகதிகளில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. ஆய்வரங்கு அறிஞர் உரை, கவியரங்கு, பட்டிமன்றம், கலைநிகழ்ச்சிகள் பல இடம்பெற்றது. தமிழகப் பேச்சாளர் பேராசிரியர் சு. நடராஜன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார்.

### யாழ். இந்து மகளிர் கல்லூரியின் பவளவிழா

யாழ். இந்து மகளிர் கல்லூரி 1943ம் ஆண்டு யாழ். இந்துக் கல்லூரி அதிகாரசபையின் முகாமைத்துவத்தின் கீழ் செயற்பட்டது. தனியான பாடசாலையாக அமைக்கும் முயற்சிக்கு உறுதுணை செய்தவர் திருமதி விசாலாட்சி சிவகுருநாதர். அம்மையாரின் உருவச்சிலை இம்மாதம் நடைபெற்ற பவளவிழாவின்போது கல்லூரி வளாகத்தில் திறந்துவைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெல்லிப்பழை தோதரை அம்மன்
மகா கும்பாபிஷேக விழா காட்சிகள் - 2018.08.31







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Print Master. T.P. 021-205 3322

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org